**தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சு**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 160 – சுற்றாடல் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றாடல் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** | **அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்** | **இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1(அ) | தனியார் காணிக்காக செய்யப்பட்ட செலவினம் அமைச்சின் கணக்குகளில் காண்பித்ததை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.6.1(அ)(i) |
| 1.6.1(ஆ) | காணிகளை சட்ட ரீதியாக கையேற்பதற்கும் மற்றும் காணியின் மதிப்பீட்டு பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.6.1(அ)(ii) |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் நிதியல்லா சொத்துக்களில் காணி மற்றும் காணிகளை அபிவிருத்தி செய்தலின் கீழ் மத்திய மலைநாட்டின் கண்டி, பதுளை, நுவரெலிய மாவட்டங்களில் தரிசு தனியார் விவசாய காணிகளை புனரமைப்பதற்கான செயற்திட்டத்தின் கிரயமான ரூபா 3,791,283 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்ட செலவின விடய இலக்கம் 2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி செய்தலின் கீழ் அமுல்படுத்தப்பட்டதனால் உள்ளபடியாக அமைச்சுக்கு உரித்தல்லாத சொத்தொன்று, அமைச்சுக்கு சொந்தமான சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய பெறுமதி சொத்துப் பெறுமதியில் இருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு தயாரிக்கும் போது திறைசேரியில் இருந்து வழங்கப்பட்டிருந்த செலவின தலைப்பு இலக்கத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் செலவினம் அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையால் திறைசேரியிடம் இருந்து ஆலோசனைகளை பெற்று பொருத்தமான பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த பெறுமதி உள்ளபடியாக அமைச்சுக்கு சொந்தமான காணிகளின் பெறுமதியொன்றாக இல்லாதிருந்தமையால் அந்த பெறுமதிகளை சரியாக கணக்குகளில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | சுற்றாடல் அமைச்சில் பேணிச்செல்லப்படுகின்ற சொபாதம் பியஸ கட்டிடம் அமைந்துள்ள காணியின் மதிப்பீட்டு பெறுமதியான ரூபா 261,000,000 தொகை நிதியல்லா சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் மற்றும் காணியினை சட்ட | காணியின் சட்ட ரீதியான உரித்தை இந்த அமைச்சுக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2017 ஆம் ஆண்டு முதல் இது வரை பல தடவைகள் | மதிப்பீட்டு பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்ததுடன், காணியை சட்ட ரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரீதியாக கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் முகாமைத்துவ சேவையில் உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட மோசடி தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 260,361 தொகை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி மீதியாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 2022 ஆம் ஆண்டின் போது கட்டுநிதி கணக்கின் ஆரம்ப மீதியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த கட்டுநிதி மீதி மாதாந்தம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 130,180 தொகை மேலும் அறவிட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 வரையிலும் அறவிட வேண்டிய பெறுமதி தீர்க்கப்படாத கட்டு நிதி மீதியாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதியான ரூபா 260,361.36 தொகையில் 2022 யூலை மாதம் முதல் மே மாதம் வரை ரூபா 238,664.25 தொகை தவணையாக தீர்க்கப்பட்டுள்ளது. மிகுதி கட்டுநிதி மீதியான ரூபா 21,697.11 தொகை 2023 யூன் மாதம் அளவில் தீர்ப்பதற்கு உள்ளது. | ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் நிதிக் கூற்றுக்களில் சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) **இருப்பு புத்தகம்** | | |
| நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்பு புத்தகம் பேணிச் செல்லப்படவில்லை. | இருப்பு புத்தகம் நாளது வரையாக்குவதில் சில தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டமையால் நாளாந்தம் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணம் 751 மற்றும் 763 இன் பிரகாரம் இருப்பு புத்தகங்கள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை அறவிட வேண்டிய பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கு கடமைகளை கையளித்தல் மிகவும் வசதியீனமாக காணப்பட்ட போதும், அந்த உத்தியோகத்தர்களிடம் இருந்தும் பிணை அறவிடுதல் நடைமுறையில் பிரச்சினை உடையதாக இருந்தது. எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் இடத்து பிணை பதிவேடும் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்காக 07 செலவின விடயங்களுக்கான தேறிய நிதிஏற்பாடான ரூபா 5,400,000 தொகை முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | மூலதன வடிவிலான மீண்டெழும் மற்றும் அபிவிருத்தி செய்யும் தேவையில் 2022 ஆம் ஆண்டில் ஏற்படாமல், 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் காரணமாக நிதி ஏற்பாட்டை பயன்படுத்த முடியாமல், ஆண்டின் இறுதி வரையில் கட்டளையிடப்பட்ட பொருட்கள் கிடைக்கப் பெறாதிருந்தமை என்பவற்றினால் கொடுப்பனவுக்காக கட்டுநிதி கோரப்படாமையினால் இந்த நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | செலவினங்களை கால ரீதியில் மீளாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன், உரிய பிரகாரம் மதிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டிற்காக 08 செயற்திட்டங்களுக்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்ட தொகையான ரூபா 78,600,000 தொகையில் ஐந்து சதவீத்திற்கு மேற்பட்ட அளவு பணம் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பழுதுபார்த்தல் தேவை ஏற்படாமல் அரசகரும மொழி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்துவதற்காக வளப் பங்களிப்பாளர்களை தொடர்புபடுத்துவதில் தாமதம் ஏற்பட்டமை, நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த அளவினை விட ஆகக் குறைந்த அளவான தேவை ஏற்பட்டிருந்தமை, 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட செலவின கட்டுப்பாட்டு சுற்றறிக்கையின் | செலவினங்களை சரியாக மதிப்பிடுதல், கால ரீதியில் மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக புதிய கொள்வனவுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் கைவிட வேண்டியிருந்தமை, 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட செலவின சுற்றறிக்கையின் காரணமாக சகல கொள்வனவுகளும் மற்றும் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் கைவிடப்பட்டமையினால் இந்த நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2021 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டு சட்டத்தின் 6(1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட குறைநிரப்பு உதவி சேவை மற்றும் அவசர சந்தர்ப்பங்கள் பொறுப்புக்கள் செயற்திட்டத்தின் மூலம் சுற்றாடல் அமைச்சிற்காக 02 செயற்திட்டங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்க நிதிஏற்பாடாக ரூபா 5,175,000 வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிஏற்பாட்டில் ரூபா 1,078,805 அளவு செலவினம் செய்யப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு சுற்றுலாவிற்காக விமான பயண சீட்டுக்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விட குறைந்த செலவினத்தை செய்ய வேண்டி ஏற்பட்டமை, சந்தை நிலைமையின் காரணமாக ஆண்டின் இறுதியின் போது உதிரிப்பாகங்களை கண்டறிவதில் வசதியீனத்தின் அடிப்படையில் சில வாகனங்களின் பழுதுபார்த்தலை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தமையின் காரணமாக இந்த நிதிஏற்பாட்டு அளவுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் சரியான மதிப்பீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் 2022 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட மூலதன செயற்திட்டத்திற்கான செலவினங்களை பரீட்சிக்கும் போது 11 செயற்திட்டங்களுக்குரிய மொத்த செயற்திட்டத்தில் 75 சதவீதத்திற்கு அண்ணளவான அளவு | இந்த அமைச்சில் நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்ட ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஆரம்ப முதல் காலாண்டில் போதியளவான பிரகாரம் கட்டுநிதி கிடைக்கப் | செலவினங்களை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான மூலதன செலவினங்கள் திட்டத்தின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்கு உச்ச அளவில் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| இறுதி காலாண்டின் போதே செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இறுதி காலாண்டில் நிதிஏற்பாட்டை விடுவித்ததன் அடிப்படையில் அந்த செயற்திட்ட பணிகளை மேற்கொள்ளும் போது எதிர்பார்த்த செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதில் வசதியீனம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | பொறாதிருந்தமையின் இறுதி காலாண்டில் செலவினங்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது. | எடுத்தல் வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| **அவதானிப்புக்கள்** | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (i) **நியதிச் சட்ட ஏற்பாடுகள்** | | | |
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் திருத்த சட்டத்தின் 23(அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | அதிகார சபையினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தின் கீழ் மற்றும் அந்த சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படக் கூடிய ஏனைய ஏதாவது நியமங்கள் மற்றும் ஏனைய நியதிகளுக்கு இணங்கியமை தவிர சுற்றாடல் மாசுபடுதல் ஏற்படக்கூடிய மூலப்பொருட்கள் சுற்றடாலில் போடுவதற்கு முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும், சுற்றாடல் அமைச்சின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை ஆரம்பிக்கப்பட்ட | சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு 2022.10.17 ஆம் திகதி விண்ணப்பத்திரம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது . அதற்காக ரூபா | சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்றி முன் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் முறையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திகதி முதல் கணக்காய்வு திகதியான 2023 மே 03 ஆம் திகதி வரை (05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம்) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படாமல் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 7,076.64 தொகை தற்போது செலுத்தப்பட்டுள்ளதுடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 104(1)(4) | இழப்பு ஏற்பட்ட திகதி முதல் 03 மாத காலத்திற்குள் பூரண அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சுகுச் சொந்தமான 02 வாகனங்கள் விபத்துக்கு உட்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 2023 ஏப்ரல் 21 ஆம் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 04 வாகன விபத்துக்கள் தொடர்பாக பூரண அறிக்கை வழங்கும் போது 02 மாதங்களுக்கும் 05 மாதங்களுக்கும் இடையிலான தாமதம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சந்தையில் உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்வதில் பற்றாக்குறை நிலவியமையால் 02 வாகனங்களுக்குரிய பழுதுபார்த்தல் செலவின மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையின் காரணமாக 04 வாகனங்களுக்குரிய பூரண அறிக்கை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | **திறைசேரி சுற்றறிக்கை** | | | |
| | 2017 திசெம்பர் 31 ஆம் திகதிய 2/2017 இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2018 யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்குரிய சகல வாகனமும் அந்த | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்ட வாகனங்களை கையேற்றல் தொடர்பாக பல்வேறு | சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தின் பெயரில் பதிவுசெய்ய வேண்டியிருந்த போதிலும், சுற்றாடல் அமைச்சு பயன்படுத்துகின்ற 04 வாகனங்கள் அமைச்சின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை காரணங்களின் அடிப்படையில் தாமதங்கள் ஏற்பட்டிருந்ததுடன், சில காரணங்கள் இந்த அமைச்சின் பொறுப்பிற்கு புறம்பாக இருந்தமையை அவதானிக்கின்றோம். | எடுத்தல் வேண்டும். |
| (iv) **அரச நிதி சுற்றறிக்கை** | | | |
| 2020 நவம்பர் 09 ஆம் திகதிய 04/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | அமைச்சினால் பாதுகாப்பு சேவை பெறுகைகள் தனியார் துறைக்கு திறக்கப்படாதிருந்ததுடன், அதன் மூலம் தகைமை பெற்ற ஆர்வத்தை காண்பிக்கின்ற சகல தரப்பினருக்கும் பெறுகைகளில் பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் ஆகக் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொதுத்துறைகளில் சேவைகளை பெற்றுக் கொள்வதாயின் நிதி மதிப்பீடு செய்யும் போது 15 சதவீத விஷேட முன்னுரிமை வழங்கவேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமான வரையறுக்கப்பட்ட எல்.ஆர்.டீ.சீ சேவை (தனியார்) கம்பனிக்கு பாதுகாப்பு சேவை வழங்கும் பெறுகைகள் கையளிக்கப்பட்டமையால் அவ்வாறான விஷேட முன்னுரிமை வழங்கும் தேவை ஏற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் கூடிய பொருளாதார நலன்கள் கிடைக்கின்ற வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (i) அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகள்

முறையான அங்கீகாரம் இன்றி கீழே குறிப்பிடப்படும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி கையளிக்கப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் 2022 ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் 2022 ஆகஸ்ட் 17 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2022 சனவரி முதல் 2022 ஆகஸ்ட் 17 வரையான காலப் பகுதிக்காக சட்டரீதியான உடன்படிக்கை இன்றி ரூபா 5,383,470 தொகை செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எல்.ஆர்.டி.சீ சேவை (தனியார்) கம்பனி அரசாங்கத்துடன் இணைந்த கம்பனியாக இருந்தமையாலும், சில வருடங்களாக அமைச்சின் பாதுகாப்பு சேவை வழங்கியிருந்தமையாலும், அமைச்சு மற்றும் அந்த நிறுவனத்திற்கு இடையே புரிந்துணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையாலும் சில சந்தர்ப்பங்களின் போது எழுத்துமூல தகவல்கள் பரிமாற்றப்படவில்லை. மேலும், இந்த நிறுவனம் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்தமையினால் விஷேடமாக கையளித்தல் கடிதம் ஒன்று விநியோகிப்பதற்கு ஏற்படவில்லை. அவ்வாறே பல்வேறு நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் உடன்படிக்கை கைச்சாத்திடல் தாமதமடைந்த போதும் அந்த நிறுவனத்துடன் புரிந்துணர்வாக செயற்பட்டதன் காரணமாக எந்தவொரு இடையூறும் இன்றி அந்த | பெறுகைகள் செயற்பாடுகளின் போது குறித்துரைத்த வழிகாட்டி பின்பற்றப்பட வேண்டியிருந்ததுடன், சட்டரீதியான உடன்படிக்கைகளுக்கு புறம்பாக அரசாங்கத்தின் பணம் செலவிடப்படாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனம் பாதுகாப்பு சேவையினை வழங்கியிருந்தது. | |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்தத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட பணம் தொடர்பாக திறைசேரி பொது வைப்புக் கணக்கு இலக்கம் 6000-0-0-16-0-61 இன் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகள் முதல் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 30,737,540 வைப்பு மீதிகளின் வைப்பு கால பகுப்பாய்வில் 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான கால எல்லையில் காணப்பட்ட மீதியாக பிழையாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 570(இ) இன் பிரகாரம் மற்றும் நிதி பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது CECB நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட சகல பட்டியல்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது டன், கட்டிட திணைக்களத்தின் மூலம் இறுதிப்பட்டியல் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், சரியாக மற்றும் உள்ளபடியான தகவல்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்படாத மற்றும் வருடந்த பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கப்படாத சுற்றாடலுக்கு இசைவான சேனப் பசளைக்கான முன்மொழிவாக உயிரியல் கூறுகள் | சாத்திய வள ஆய்வு அறிக்கையின் மூலம் இந்த செயற்திட்டத்தை ஸ்தாபித்தல் பொருத்தமற்றதாக இருந்தமை பரிந்துரை | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் சாத்தியவள ஆய்வு செய்து சரியான திட்டம் மற்றும் தேவையான நிதி |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படுகின்ற (Bio Char) செயற்திட்டமொன்றை அவசரமாக செய்யுமாறு கருதி அமைச்சினால் முறையான கொள்வனவு வழிகாட்டி மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்படாமல் விடயப் பொறுப்பு அமைச்சர் ஊடாக செயற்திட்ட முன்மொழிவு பெறப்பட்டு அந்த செயற்திட்ட முன்மொழிவு மதிப்பீட்டிற்காக ரூபா 150,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செயல் திட்டம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்டிருந்ததுடன், உள்நாட்டு ரீதியில் சிறிய அளவிலான உயிரியல் உற்பத்தி மேற்கொள்கின்ற உற்பத்தியாளர்களிம் இருந்து செயற்திட்ட முன்மொழிவை அமுல்படுத்துதல் பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட் போதும் உயிரியல் பல்வகை பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையினால் அந்த பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஏற்பாட்டுன் ஆரம்பிக்க வேண்டியிருந்ததுடன், செலவினத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளக் கூடியவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 உள்நாட்டு நிதியங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) பசுமை தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாற்று மேடைகளை ஏற்படுத்துவதற்காக தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்யும் போது குறிகாட்டிகள் மற்றும் அவர்களின் இயலளவை கவனத்தில் கொள்ளவேண்டிய போதிலும், அவ்வாறில்லாமையினால் 28 தொழில் முயற்சியாளர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களை இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக பசுமை தொழில் முயற்சியாளர்களை தெரிவு செய்யும் போது குறைந்த வருமானம் பெறும் குடும்ப அலகுகளாக பிரதேச செயலாளர்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இந்த சகல தெரிவு செய்தல்களும் மாவட்ட செயலாளரினதும் பிரதேச செயலாளரினதும் அங்கீகாரத்தின் அடிப்படையில் தெரிவு செய்து அனுப்பப்பட்டவர்கள் | உரிய அவதானிப்புகள் மற்றும் குறிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் பொருத்தமற்ற மற்றும் சாத்தியமற்ற நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டமையினால் உள்ளபடியாக நலன்கள் உரித்தாக வேண்டிய தகைமையுள்ள தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தின் பணம் பயனற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மாத்திரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆகும். மேலும் நிகழ்ச்சித் திட்டத்தை நிறுத்துதல் குறிகாட்டிகளின் பிரச்சினைகளினால் அல்லாமல் ஏனைய பல்வேறு காரணங்களினாலும் தாக்கமளித்திருந்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 28 நலனாளிகளுக்கு நலன் பணம் வழங்கப்படாதிருந்ததுடன், மேலும் 17 பேர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணம் அறவிடப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் மிகுதியையும் அறவிடுவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இந்த நிகழ்ச்சித் திட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் சில மாவட்டங்கள் அதற்காக தொடர்பு கொள்ளாமையினால் நிகழ்ச்சித் திட்டம் எதிர்பார்த்த முறையில் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன், இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக தொடர்புபட்ட 336 நலனாளிகள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பங்குபற்றிய 20 சதவீதத்திற்கு அண்ணளவான அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் அதிக நலனாளிகளின் அளவு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்ததன் | சில மாவட்டங்களில் ஆகக் குறைந்த அளவை விஞ்சி விண்ணப்ப பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன், அதன் பிரகாரம் கிடைத்த விண்ணப்பங்கள் யாவும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், அதன் ஆகக் கூடிய எல்லையான 650 நாற்று மேடைகளை விஞ்சாதிருந்தது. எனினும் இந்த பசுமை தொழில் முயற்சியாளர்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரினால் அதிக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன், மதிப்பீட்டின் போது இந்த | அமைச்சரவை தீர்மானம் மற்றும் உரிய அவதானிப்புகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படைக் காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்டத்தில் இருந்து அதிக விண்ணப்பங்களின் அளவில் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | |
| (இ) | நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய அமைச்சினால் 2022 மார்ச் முதல் 2022 திசெம்பர் வரை மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 2,499,450 செலவிடப்பட்டிருந்ததுடன், செயற்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக நலனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொழில்நுட்ப மற்றும் ஏனைய பயிற்சிகள் நலனாலிகளால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணத்தின் மூலம் எதிர்பாத்த விளைவுகளை அடைந்து கொள்ளுதல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பசுமை தொழில் முயற்சி மேம்பாட்டின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு பயிற்சியினை வழங்கும் போது செயற்திட்டங்களுக்கு இடையிலே பயிற்சி ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் உரிய பயிற்சியினை வழங்கும் போது பயிற்சிக்காக அனுப்புவதில் இடையூறுகள் காணப்படுகின்றமையினால் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் இடையிடையே வழங்கப்பட்டிருந்தது. | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றக் கூடிய வகையில் சகல நிகழ்ச்சித் திட்டங்களும் ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்ததுடன், அமைச்சரவை தீர்மானம் மற்றும் அவதானிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப குறிகாட்டியாக குறைந்த வருமானம் பெறுபவர்கள் இலக்காக கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அம்பலாந்தோட்டை செயலகப் பிரிவில் குறைந்த வருமானம் பெறும் நபர்கள் அல்லாத இருவருக்கு இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 600,000 தொகை வழங்கப்பட்டிருந்தமை | நலனாளிகளை தெரிவு செய்யும் போது குறைந்த வருமானம் பெறுபவர்களின் குறிகாட்டியான வருமான நிலைமையை பரிசீலிக்கும் போது பிரதேச செயலாளரின் பரிந்துரையின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்துடன், | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்குரிய குறிகாட்டிகளை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | அம்பலாந்தோட்ட பிரதேசத்திலும் இந்த முறைமைகள் பின்பற்றப்பட்டிருந்தது. | |
| (உ) | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 150,000 வீதம் முதலாவது கட்டத்தை அமுல்படுத்துவதற்கு பணம் பெற்ற 28 நலனாளிகளுக்கு அது இடையே நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதில் 09 பேர்களிடம் இருந்து அமைச்சுக்கு அறவிட வேண்டிய ரூபா 1,411,581 தொகை அறவிடப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேற்கூறப்பட் நலனாளிகள் இருவரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 296,500 தொகையை மீண்டும் செலுத்தப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், மேற்கூறப்பட்ட நலனாளிகளுக்காக தவணையாக பெற்றுக் கொள்ளும் போது நிர்வாக செலவினமாக ரூபா 85,231 செயற்திட்ட நிதியத்தின் மூலம் செலவிடப்பட்டிருந்ததுடன், அது பயனற்ற செலவினமாக இருந்தமை கணக்காய்வின் அவதானிக்கப்பட்டது. | 28 நலனாளிகளில் 17 பேர்களிடம் இருந்த அறவிட வேண்டிய பணம் தற்போது அறவிடப்பட்டுள்ளது. மேலும் இரண்டு நலனாளிகளுக்காக நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்ட போதும் அவர்களினால் உரிய பணம் பெறப்படவில்லை. மிகுதி 09 நலனாளிகளிடம் இருந்தும் உரிய பணத்தை பெற்றுக் கொளவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் அரசாங்கத்தின் பணம் செலவிடப்படல் வேண்டும். |
| (ஊ) | பௌதீக கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் இரண்டு நாற்று மேடைகள் செயற்படும் நிலையில் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், உற்பத்தி செய்யப்படுகின்ற நாற்றுக்களை விற்பனை | கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் பிரகாரம் இவ்வாறான தொழில் முயற்சிகளை நடாத்திச் செல்வதில் வசதியீனமாக இருந்ததுடன் நாட்டில் பொருளாதார நிலைமை | செயற்திட்ட மேற்பார்வை, மீளாய்வு என்பன உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்காக தேவையான முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்படாதிருந்தமை யும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நாற்றுமேடைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வது நிச்சியமற்ற நிலைமையில் காணப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | சரியானதன் பின்னர் சராசரியான பிரகாரம் நாற்று மேடைகளின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கின்றோம். நலனாளிகள் பிரதேசத்தில் காணப்படுகின்ற சந்தை தொடர்பான அனுபவத்துடன், செயற்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தனர். | |
| (எ) | அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையின் 05 பதவிகள் இரண்டு வருடங்கள் முதல் வெற்றிடமாக காணப்பட்டதன் மூலம் இவ்வாறான செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது பெறக்கூடியதாக இருந்த அறிவினை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமையும், இவ்வாறான செயற்திட்டங்களில் செயலாற்றல் மட்டம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது. | சுற்றாடல் அமைச்சு நேரடியாக விவசாய துறையின் செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருந்தமை யால் இந்த பதவிகளின் தேவை எழுந்திருக்காமையினால் பதவியினை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரத்தை திருத்தித் தருமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றல் இந்த திணைக்களத்தின் நிறுவனத்திற்குரிய தொழில் முயற்சியாளர்களுக்காக பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. | பதவியணியினருக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முன் அமைச்சின் பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக மீளாய்வு மற்றும் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனம் ஒன்றினால் கேள்வி கையளிக்கப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்திற்கு முறையான கையளித்தல் கடிதம் விநியோகிக்க வேண்டியருந்த போதிலும், அமைச்சினால் பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளை வழங்குவதற்குரிய நிறுவனத்திற்கு கிடைத்த கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | எல்.ஆர்.டீ.சீ சேவை (தனியார்) கம்பனி அரசாங்கத்திற்கு இணைந்த கம்பனியாகவும், சில வருடங்களாக அமைச்சின் பாதுகாப்பு சேவை வழங்கியிருந்த அந்த நிறுவனத்திற்கு இடையே பரஸ்பர புரிந்துணர்வு நடவடிக்கைகள் காணப்பட்டமையினாலும் இந்த நிறுவனம் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்தமையால் விஷேடமாக கையளித்தல் கடிதம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மெய்யாய்வின் போது 02 விடயங்கள் தொடர்ச்சியாக பற்றாக்குறை விடயமாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக கண்டறிவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிந்துரை பெறப்பட்டு அது தொடர்பாக எதிர்காலத்தின் போது பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த இருப்பு மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் படி அமைச்சின் சில பிரிவுகளினால் பேணிச் செல்லப்பட வேண்டிய பொருட்பதிவேட்டு புத்தகங்கள் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் நாளதுவரையாக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | பிரிவிவுகளின் பொருட் பதிவேட்டு புத்தகங்களை நாளதுவரையாக்குவதற்கு அந்த பிரிவுகளின் உத்தியோகத்தர்களுக்கு போதுமான அறிவு காணப்படாத சந்தர்ப்பங்களில் நாளதுவரையாக்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்த போதும், களஞ்சிய மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்படும் இடத்து களஞ்சிய மெய்மெய்யாய்வு சபை மற்றும் களஞ்சிய பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தரின் ஒத்துழைப்புடன் உரிய பொருட்பதிவேட்டு புத்தகங்கள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. | பொருட் பதிவேட்டு புத்தகங்களை நாளதுவரையாக பேணிச்செல்லல் வேண்டும். |
| (இ) | அமைச்சின் காலநிலை மாற்ற பிரிவில் காணப்பட்ட செயற்திட்டம் ஒன்றின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது 05 விடயங்கள் கால நிலை மாற்ற பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கணக்கு பிரிவில் அறிவிக்கப்படாமையினால் அந்த விடயம் பிரதான பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த விடயம் 2022 ஆம் ஆண்டில் இந்த அமைச்சுக்கு கிடைத்திருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வில் அந்த விடயங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டதன் பின்னர் தற்போது பொருட் பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், நிதி பெறுமதி உரிய செயற்திட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்டு அந்த பெறுமதியும் நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் பதிவேட்டு புத்தகங்கள் கால ரீதியில் மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வின் போது 07 பொருட்களின் மிகையான பொருட்களாக இனங்காணப்பட்டிருந்ததுடன், அந்த பொருட்கள் பிரதான பொருட் பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . அந்த பொருட்கள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிய நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி வெளிப்படுததப்படாதிருந்தமை யால் அமைச்சுக்கு சொந்தமான சொத்தக்களின் பெறுமதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பொருட் பதிவேடு புத்தகத்தில் தற்போது உள்ளடக்கப்பட்டுள்ளதுட ன், நிதிப் பெறுமதியை கண்டறிந்ததன் பின்னர் விரைவாக நிதியல்லா சொத்துக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | அமைச்சின் ஆவண காப்பகம் (Record Room) இல் பயன்படுத்தப்படாதிருந்த புதிய 03 கணனி மேசைகள் 02 முகாமைத்துவ உதவியாளர் மேசைகள் மற்றும் பூச்சாடிகள் என்பவற்றிக்காக பயன்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள 08 கொள்கலன்கள் விளைவற்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், 09 வது மாடியில் திறந்த வெளியில் நிழற்பட பிரதி இயந்திரம் ஒன்றை வைப்பதற்கு தயாரிக்கப்பட்ட 03 மர இராக்கைகளும் பயனற்று காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது. | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் முன்னாள் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சாக அமைச்சு செயற்பட்டிருந்த காலத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட விடயங்களாக இருந்ததுடன், முன்னர் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அந்த விடயங்களை களஞ்சியத்தில் வைப்பதற்கும் போதியளவான இடவசதிகள் காணப்படாமையினால் 09 ஆவது மாடியில் முன்னால் அவைகளுக்கு இழப்பு ஏற்படாத வகையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தின் போது தேவையான சந்தர்ப்பத்தில் இவற்றை பயன்படுத்துவதற்கு | அரசாங்கத்தின் சொத்துக்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கும் மற்றும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியும். | |
| (ஊ) | அமைச்சின் வாகனங்களுக்காக புதிய டயர்களை கொள்வனவு செய்யும் போது அகற்றப்படுகின்ற பழைய டயர்கள் களஞ்சியத்திற்கு வழங்கும் திட்ட முறைமையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டின் போது 74 புதிய டயர்கள் வாகனங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு உரியதாக அகற்றப்பட்ட டயர்கள் அமைச்சின் வளவில் களஞ்சியப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த டயர்கள் அமைச்சுக்கு பெற்று தேவையான பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் பழைய வாகனங்களை களஞ்சியப்படுத்துவதற்காக பொருத்தமான களஞ்சிய சூழல் காணப்படாதிருந்தமையால வாகனங்களில் இருந்து அகற்றப்படுகின்ற பழைய டயர்கள் மீண்டும் அமைச்சுக்கு பெற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், எதிர்காலத்தில் இதற்காக பொருத்தமான களஞ்சிய சூழலை அமைத்து உத்தேசித்த முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (எ) | சுற்றாடல் அமைச்சுக்கு சொந்தமான குளாம் வாகனங்களின் பழுதுபார்க்க வேண்டிய 06 வாகனங்கள் கராஞ்களிலும் அமைச்சின் வளவிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் 01 வருடத்திற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான கால வீச்சில் அவ்வாறு தரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும், பழுதுபார்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வாகனங்களில் 02 வாகனங்கள் 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான காலம் தனியார் தரப்பினர் மற்றும் கராஞ்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை | நிதி ஏற்பாடு பற்றாக்குறையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தாமதமடைந்தமை, விற்றுத் தீர்ப்பதற்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ள வேண்டிய வாகனங்கள் காணப்படுகின்றமையால் அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை, முற்பண தொகை பெற்றுக்கொண்டதன் பின்னர் பழுதுபார்த்தல் ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் | வாகனங்களின் பராமரிப்பு தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. | அவ்வாறு முற்பணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் காணப்படாமையால் பழுதுபார்த்தல்கள் தாமதமடைந்தமை மற்றும் வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக அகற்றல் குழுவொன்று நியமிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | 2022 சனவரி 25 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) பந்தியின் பிரகாரம் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையில் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஓட்ட நிலையில் காணப்படாத பழுதுபார்த்தல் பொருத்தமற்றது என வாகனங்களை விற்றுத் தீர்க்கப்படாதிருக்குமாயின் அந்த சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் இலக்கம் 05/2020 இன் 02(அ) இன் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனையின் பிரகாரம் அவ்வாறான வாகனங்களை விற்றுத் தீர்க்கும் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 02 வாகனங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளில் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய வாகனங்களை இனங்காணல் மெய்மெய்யாய்வு சபையினால் இலக்கம் 65-1578 மற்றும் HQ - 4331 என்ற வாகனங்கள் இனங்கண்டு அரசாங்க நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த ஆண்டில் நியமிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தீர்மானிக்கப்பட்ட அகற்றல் சபையின் கவனத்திற்காக அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | சொபாதம் பியஸ கட்டிட வளவில் ரூபா 3,479,520 | உயிரியல் வாயு பிரிவில் இருந்து சிற்றுண்டிச்சாலை | வளங்களை ஆக்கபூர்வமானதாக |

| | | | |
|---|---|---|---|
| | செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் உயிரியில் வாயு உற்பத்தி செய்து பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2017 செப்டம்பர் 14 ஆம் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 23 ஆம் திகதி வரையான 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உயிரியல் வாயு பயன்படுத்தப்படாமல் வாயு தாங்கியில் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,479,520 மொத்த கிரயமொன்றை செய்து உயிரியல் வாயு உற்பத்தி செய்து பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட இந்த கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையில் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வரை உயிரியில் வாயு எடுத்துச் சென்று பயன்படுத்துவதற்காக அதற்கு தேவையான துணைப் பாகங்களை தயாரிக்குமாறு மேலதிக செயலாளர் (நிர்வாகம்) 2019.10.08 ஆம் திகதிய 02/03/சேவை/01/23 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இந்த அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் CECB நிறுவனத்தின் முகவர்களுக்கு பிரதி நிதிகளுக்கு இடையே 2023.05.17 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த பழுதுபார்த்தலை மேற்கொள்ளல் தொடர்பாக இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஓ) | 2021 ஏப்ரல் 21 ஆம் விநியோகிக்கப்பட்டிருந்த பெறுகைகள் பணிக் கோவையின் 38 ஆவது மேலதிகம் இன் பிரகாரம் பெறுகைகள் வழிகாட்டி இலக்கம் 9.3.1(அ) இன் பிரகாரம் வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான கூறுவிலை கோரல் பொருளாதார ரீதியில் பயனுள்ளது என கவனத்தில் கொண்டு உரிய வாகனங்கள் உள்நாட்டு முகவர் நிறுவனத்தில் இருந்து | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் உரிய வாகனங்களின் உள்நாட்டு முகவர் நிறுவனங்களில் இருந்து மேற்கொள்ள முடியும். முகவர்கள் ஊடாக வாகனங்களை ளுசஎiஉந செய்தல் இது வரை காணப்பட்ட நடவடிக்கையாகும். எனினும், இந்த செயற்பாடுகளின் மூலம் வாகனங்களை சேர்விஸ் | பெறுகைகள் பணிக் கோவை மற்றும் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ள வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது வாகனங்களை சேர்விஸ் செய்வதற்குரிய வாகன முகவர்கள் ஊடாக வாகனங்களை சேர்விஸ் செய்வதற்காக 36 வாகனங்களுக்குரிய சேவை தடவைகள் 63 இற்காக ரூபா 4,491,326 மொத்த கிரயமொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், இதன் போது உரிய சேர்விஸ் இற்காக செலவிடப்பட்ட கிரயம் பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமானதாக இருந்தா என கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | செய்யும் போது ஒப்பீட்டு ரீதியில் அதிக செலவினம் செய்வதற்கு ஏற்படுகின்றமையால் பதிவு செய்த கராஞ்களிலும் கூறுவிலை கோரி பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ளுசளைந மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஓ) | அமைச்சில் ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்தும் வெளிநாட்டு மானியங்களின் மூலமும் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மூலமும் அச்சிடப்பட்டிருந்த புத்தகங்கள், நாளிதழ்கள், போஸ்டர்கள், துண்டுப்பிரசுரங்கள் போன்ற 34,889 வெளியீடுகளுக்கு அண்மித்த அளவு ஒன்று பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் ஒவ்வொரு பிரிவுகளிலும் மற்றும் ஆவண காப்பகங்களிலும் களஞ்சியப்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், அந்த அச்சிடல்களுக்கு இடையே கிரயம் இனங்காணமுடியாத 23,977 வெளியீடுகளின் கிரயம் ரூபா 4,470,861 ஆகும். | இந்த பந்தியில் குறிப்பிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் பல்வேறு வெளியீடுகள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களின் கீழ் அச்சிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் நீண்டகால ரீதியில் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டமாக இருந்ததுடன், சில வருடங்களில் பயன்படுத்துவதற்காக இந்த அச்சிடலகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த விடயங்கள் தொடர்பாக உங்களின் 2023.04.25 ஆம் திகதிய PSE/D/ME/01/2023/AQ/09 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்காக எதிர்காலத்தில் விரிவான பதிலொன்று | செயற்திட்டத்திற்காக கிடைக்கின்ற ஒன்றிணைந்த நிதியம் மற்றும் வெளிநாட்டு மானியங்கள் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மிகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஔ) | சுரகிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த கிரயம் ரூபா 72,220 ஆன 04 புள்வெட்டும் இயந்திரங்களில் 03 இயந்திரங்கள் அமைச்சு அலுவலகத்தில் பயனற்று காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், ஏனைய இயந்திரங்கள் அமைச்சின் சூழலில் பயன்படுத்தப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் சுரகிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செலவினங்கள் செய்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த 04 புல் வெட்டும் இயந்திரங்கள் உரிய நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முன்னாள் கௌரவ அமைச்சரால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் சுரகிமு கங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இந்த புல்வெட்டும் இயந்திரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு புல்வெட்டும் இயந்திரம் அமைச்சின் வளவின் எல்லையில் உள்ள வாய்க்கால் வழிகளை சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்படுவதுடன், எஞ்சிய இயந்திரங்கள் அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், சுரகிமு கங்கா செயற்திட்டத்தின் கீழ் தேவையான இடமொன்றிக்காக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் நிதியினை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட வளங்கள் எதிர்பார்த்த பணிகளுக்காக ஈடுபடுத்தப்படல் வேண்டும். |
| (க) | அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 16 வாகனங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கி அந்த அதிகார சபையில் பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த வாகனங்களை சட்டரீதியாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அமைச்சின் தகவல்களின் பிரகாரம் 03 வாகனங்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போதிலும், அந்த வாகனங்கள் மத்திய | இந்த அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ள வாகனங்களை சட்டரீதியான கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அந்த வாகனங்களை கையேற்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இன் | நிலையான சொத்துக்களை கைப்பற்றுதல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக கணக்கு வைத்தல் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றாடல் அதிகார சபையிடம் காணப்படாதிருந்தமை அந்த அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் மேற்கூறப்பட்ட 03 வாகனங்கள் (கை டெக்டர்) தொடர்பாக பௌதீக இருப்பு கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | கையொப்பத்துடன் 2020.09.29 ஆம் திகதி கடிதம் ஒன்று பணிப்பாளர் நாயகம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. 03 கை டக்டர்களின் பதிவு சான்றுதழின் மூலப் பிரதி எங்களிடம் காணப்படுவதுடன், இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையில் ஆராயப்படுகின்றது. | |
| (கா) | பௌதீக இருப்பு கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்தின் போது அமைச்சின் களஞ்சியத்தில் 30 விடயங்கள் (டோனர், மவுஸ்பேட் மற்றும் நிறப்புச்சுக்கள்) இருப்பு புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், அந்த விடயங்கள் தற்போது பயன்படுத்தப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அந்த விடயங்களை பாவனைக்கு எடுக்கும் இயலுமை பரீட்சிக்கப்பட்டு அதன் பிரகாரம் அந்த விடயங்களை பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இருப்பு புத்தகங்களில் காணப்படாதிருந்தமையை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அண்மைக் காலங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட விடயம் அல்லாதிருந்ததுடன், இந்த விடயங்கள் களஞ்சியத்திற்கு எவ்வாறு கிடைத்தது என களஞ்சிய பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அனுபவம் ஒன்று காணப்படாதிருந்ததுடன், அது தொடர்பான பதிவேடுகளை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. களஞ்சியத்தில் போதியளவில் இடவசதிகள் காணப்படாதிருந்தமையால . இந்த பொருட்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த விடயங்கள் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுக்கும் இயலுமை | இருப்பு கட்டுப்பாட்டு முறைமையை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |

காணப்படுகின்றதா என கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### 3.5 அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல் தேவை மற்றும் அதற்காக பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் நிதிப் பிரமாணம் 880 முதல் நிதிப் பிரமாணம் 893 வரையான ஏற்பாடுகளில் குறிப்பிடப்படுவதுடன், கடமை நடவடிக்கைகளுக்காக பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை கட்டளைச் சட்டம் 612 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறே அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் (4) ஆம் பிரிவின் படி அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களினால் பிணை வைக்க வேண்டிய அளவு மற்றும் பிணை வைக்க வேண்டிய முறைமை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக அமைச்சின் செயலாளருக்கு மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 89(I) இன் படி உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை அறவிட வேண்டியமை குறிப்பிடப்பட்ட போதிலும், பிணை அறவிட வேண்டிய காசாளர், களஞ்சிய பொறுப்பாளர் போன்ற சில பதவிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் பிராகரம் அந்த பதவிகளின் கடமைகளை கையளித்தல் மிகவும் வசதியீனமாக இருந்தது. ஒரே சேவைக்கு உரித்தான உத்தியோகத்தர்கள் பொறுப்புக்களை அதிகரித்து கடமைகளுக்காக ஈடுபடுத்துதல் வசதியீனமாக இருந்தமையால் அந்த சேவைகளிலும் ஏனைய பதவிகளிலும் உள்ள பொறுப்புக்களுடன் ஒப்பிடும் போது குறைவாகும். இந்த | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறுப்புக்கள் அதிகமாக பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல் வசதியீனமாக இருந்த போதும், அந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை அறவிடுவதல் நடைமுறைப் பிரச்சினைகளுடன் காணப்பட்டது. | |

## 3.6 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| PF - 9453 என்ற கெப் வண்டிக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்காக ரூபா 53,200 செலவிடப்பட்ட போதிலும், உரிய தொகை காப்புறுதி கம்பனியினால் மீளளிப்பு செய்தல் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அந்த செலவினம் நட்டம் மற்றும் இழப்பாக இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | PF - 9453 என்ற கெப் வண்டியின் விபத்து தொடர்பாக ஏற்பட்ட நட்டம் காப்புறுதி உரித்துறுதியில் மேவுகை செய்யப்படாதாக காப்புறுதி கம்பனி அறிவித்தமையினால் நட்டம் மற்றும் இழப்பு பதிவேட்டில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை சரியான பிரகாரம் கணக்கீடு செய்து மீளளிப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் சிரேஷ்ட நிலை பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆக காணப்பட்டதுடன், அது மொத்த வெற்றிட எண்ணிக்கையில் 45 சதவீதமாக இருந்தது. | சிரேஷ்ட நிலைக்குரிய இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை திட்டமிடல் சேவையின் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அரச நிர்வாக அமைச்சு MISCO தரவு முறைமை ஊடாகவும் மற்றும் எழுத்து மூலமும் அவ்வப்போது அறிவித்திருந்தது. இலங்கை திட்டமிடல் சேவையின் 1 தரத்தின் பதவிக்கு உத்தியோகத்தரை சேர்ப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 02/2022 இன் பிரகாரம் பதவிகளை நிரப்புவதற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் (உயிரியல் பல்வகைமை) பதவியும் 2/2022 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்டுள்ள விவசாய சேவையின் பதவி மற்றும் இலங்கை பொறியியல் சேவையின் 1 தரத்தின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவி சுற்றாடல் அமைச்சின் முன்னைய பதவியணியில் காணப்படாதிருந்தமையாலும் அந்த பதவிகளின் | முகாமைத்துவ செயற்பாடுகளை முறையாகவும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவை தற்போது எழுந்திருக்காமையினாலும் அந்த அங்கீகாரத்தை திருத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அமைச்சுக்காக தேவையற்றிருந்த இலங்கை விவசாய சேவையின் I, II மற்றும் III தரத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகள் அமைச்சு பதவியணியின் பதவிகளாக அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த 05 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. | எனது 2020.09.10 ஆம் திகதிய இலக்கம் 02/02/ADM/நானாவித-10 என்ற கடிதம் மூலம் அந்த பதவிகள் முன்னைய பதவியணியில் காணப்படாதிருந்தமையால . அந்த 05 பதவிகளுக்காக வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தை திருத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது. | முகாமைத்துவ செயற்பாடுகளை முறையாகவும், செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | சுற்றாடல் அமைச்சுக்காக அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு மேலதிகமாக 294 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட போதும் 2023 மே 30 ஆம் திகதி வரையிலும் அதற்கான பதவியணியின் பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்படவில்லை. | 2023.01.25 ஆம் திகதிய DMS/CM/11 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தில் 299 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக இந்த அமைச்சுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. | தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இவ்வாறு மீளாய்வாண்டின் போதும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்சாரம்) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (நீர் மற்றும் கட்டிடம்) என்ற அங்கீகரிக்கப்ட்ட இரண்டு பதவிகளும் வெற்றிடமாக காணப்படுகின்ற அவதானிக்கப்பட்டது. | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்காக திறந்த வழியின் கீழ் ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்காக பொதுப்போட்டி பரீட்சை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த அமைச்சில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் விபரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ செயற்பாடுகளை முறையாகவும், செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |